மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) மானியம் பெறும் பள்ளி ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதைப்போல் அப்பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர் அல்லாதவர்களுக்கும் கீழ்க்கண்ட சலுகைகள் வழங்கப் பட்டுள்ளன :—

(1) அரசு மருத்துவ மனைகளிலும் மருந்தகங்களிலும் இலவச மருத்துவ வசதி.

(2) வீட்டு வாடகைப்படி.

(3) கைத்தறித்துணி வாங்க முன்பணம், பண்டிகை முன்பணம் ஆகிய வற்றை அவர்களது வருங்கால வைப்பு நிதியிலிருந்து வழங்குதல்.

(4) ஓராண்டில் நான்கு திங்கள்வரை குளிர்கால படி.

இவைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

திரு. எம். ராஜா அய்யர் : தலைவர் அவர்களே, ஆசிரியர்களுக்கு வழங்கி யிருக்கும் ஒரு நலன் அவர்கள் ஓய்வுபெறும் வயதைப் பொறுத்ததாகும். ஆசிரியர் அல்லாத சிப்பந்திகளுக்கும் அந்த ஓய்வு பெறும் வயதின் உச்ச வரம்பு ஆசிரியர்களுக்கு ஒப்ப பொருந்துமா என்று அறிந்துகொள்ள விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஓய்வு பெறும் வயதைப் பொறுத்தவரை, ஆசிரியர் அல்லாதவர்களுக்கு, மற்ற அரசாங்கப் பள்ளிகளில் பணி புரிபவர்களுக்கு என்ன நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதோ அதுதான் நிர்ண யிக்கப்படும். ஆசிரியர்களைப் பொருத்தவரையில் அரசாங்கப் பள்ளிகளில் உள்ள முறைதான், தனியார் பள்ளிகளுக்கும் பொருந்தும்.

B.T. Assistants.

*3. Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether the representation for increase in the minimum of the new scale of B.T. Assistants has been considered; and

(b) if so, the stage at which the matter now stands ?

பி.டி. ஆசிரியர்கள்

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) புதிய சம்பள விகிதத்தில் குறைந்த அளவு அடிப்படைச் சம்பளத்தை உயர்த்துமாறு பி.டி. ஆசிரியர்கள் செய்து கொண்ட முறையீடு பரிசீலிக்கப் பட்டுள்ளதா ?

(இ) ஆமெனில், அப்பரிசீலினை இப்போது எந்நிலையில் உள்ளது ?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) இரண்டாவது ஊதிய ஆணைக்குழு பரிந்துரைத்த ஊதிய விகிதங்களின்மீது முறையீடுகளை ஆராய தலைமைச் செயலாளர் நியமிக்கப்பட்டார். அவர் பட்டதாரி ஆசிரியர்களின் கோரிக்கைகளை ஆராய்ந்து பரிந்துரைகளை அளிப்பார். அந்தப் பரிந்துரைகள் விரைவில் எதிர்பார்க்கப்படுகின்றன.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, மார்ச் 7-ம் தேதியன்று ஒத்திவைப்புத் தீர்மானம் ஒன்றை நானும், சில மாண்புமிகு உறுப்பினர்களும் கொடுத்து, பட்டதாரி ஆசிரியர்களுக்கு ஊதிய உயர்வு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டோம். அதற்கு இரண்டு மாதத்திலே முடிவெடுத்துத் தெரிவிக்கப்படும் என்ற உறுதி மொழியையும் முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அதை ஒப்புக் கொண்டு பட்டதாரி ஆசிரியர்கள் தங்களது போராட்டத்தைக் கைவிட்டார்கள். உறுதிமொழி அளித்து 5 மாதங்களுக்கு மேலாகியும் பிரதம காரியதரிசியின் அறிக்கை அரசாங்கத்திற்கு இன்னும் அனுப்பப்படவில்லையென்று தெரிகிறது. ஆகவே அதன் அடிப்படையிலே அரசாங்கம் என்ன செய்வதாக உத்தேசித்துள்ளது, அந்த உறுதிமொழி ஏன் காப்பாற்றப்படவில்லை என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் ஒரு 6 மாத காலம் வேண்டுமென்று சொன்னார்கள். அது பிறகு 3 மாதம் ஆயிற்று; பிறகு 2 மாதம் ஆக்கப்பட்டது. கூடியவிரைவில் பிரச்னைகள் தீருமேயானால், அரசாங்கத்திற்கு நல்லதுதான். அந்தத் தனி நபர் குழுவிற்கு இந்த ஒரு பிரச்னை அல்லாமல் பல்வேறு பிரச்னைகளும் தரப்பட்டு, எல்லாப் பிரச்னைகளையும் கேட்டு அதுபற்றி ஆராயவேண்டியிருக்கிறபடியால், சிக்கல்கள் எழுந்தன. முதலமைச்சர் அவர்கள் அவர்களைக் கூப்பிட்டு வைத்துப் பேசியிருக்கிறார்கள். அந்தப் பட்டதாரி ஆசிரியர்களின் பிரதிநிதிகளையும் இரண்டு வார காலத்திற்கு முன்னால்கூட கூப்பிட்டு வைத்துப் பேசினார்கள். நேற்று, மறுபடியும் கலந்துபேசி முடிவெடுப்பதாக இருந்தது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய உடல்நலக் குறைவு காரணமாக ஒத்திப்போட்டிருக்கிறார்கள். விரைவிலே முடிவெடுக்க வேண்டுமென்ற ஆர்வத்தோடு இருக்கிறார்கள். விரைவிலே முடிவெடுக்கப்படும் என்று கூறியிருக்கிறார்கள்.

திரு. கே. ராஜாராம் : எற்கெனவே கொடுக்கப்பட்ட வாக்குறுதிகள் எப்படியாவது போகட்டும். இனிமேலாவது ஒரு தேதியைக் குறிப்பிட்டு அதற்குள் கொடுக்க முடியும் என்று அறிவிப்பார்களா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இதிலுள்ள சங்கடம், இதுதான். பட்டதாரி ஆசிரியர்களைப் பற்றிய பிரச்னை மட்டும் தரப்பட்டிருந்தால், அது தீர்க்கப்பட்டிருக்கலாம். வேறு சில பிரச்னைகளையும்

கொடுத்து, அவை சம்பந்தமான முறையீடுகளையும் கேட்க வேண்டிய அவசியம் இருப்பதினால், இன்னும் சிக்கல்கள் தீராமலிருக்கின்றன. சிக்கல்களைத் தீர்ப்பதற்காக நேற்று கூடினார்கள். மறுபடியும் கூட இருக்கிறார்கள். விரைவிலே முடிவெடுக்கப்படும் என்று முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, அரசாங்கத்தினுடைய உறுதிமொழி காப்பாற்றப்படாத காரணத்தினால், மறுபடியும் ஒரு போராட்டத்தில் இறங்குவதுபற்றி ஆலோசனை செய்து, பட்டதாரி ஆசிரியர்கள் நடவடிக்கை எடுத்திருப்பதுபற்றி அரசுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இந்தப் பட்டதாரி ஆசிரியர்களின் பிரதிநிதிகளோடு—இரண்டு வாரத்திற்கு முன்பு என்று கருதுகிறேன்—நானும், முதலமைச்சர் அவர்களும் பேசியிருக்கிறோம். மிக அனுதாபத்தோடு கவனிக்கப்படும்—கவனித்துக்கொண்டிருக்கிற காரணத்தினால், சங்கடங்கள் எழாமல் காப்பாற்ற வேண்டிய நிலைமை இருக்கிற காரணத்தினால், அரசாங்கம் ஆலோசனை செய்து முடிவெடுக்க வேண்டியிருக்கிறது. ஆகவே போராட்ட முயற்சியில் அவர்கள் ஈடுபட வேண்டாமென்று மாண்புமிகு உறுப்பினர் மூலமாகவும் தெரிவித்துக்கொள்கிறேன். ஏனென்றால் இன்னும் சில நாட்கள் கிடைத்தால், நல்லவகையில் முடிவெடுக்க வாய்ப்பு கிடைக்குமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

THIRU A. R. DAMODARAN : Sir, although the Government may take some time in view of the complicated nature of the recommendations, may I know if the Hon. Minister will give a simple assurance that whatever recommendations are accepted will be accepted with retrospective effect from March 7, 1972?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, குழுவின் பரிந்துரைகள் வந்த பிறகுதான் முடிவுக்கு வர முடியும்.

திரு. டி. சந்தோஷம் : தலைவரவர்களே, இதில் பல அரசாங்க அலுவலாளர்களின் பிரச்னைகளையும் சேர்த்துப் பரிசீலனை செய்கிறபடியால், சிக்கல்கள் ஏற்பட்டு, அதனால் காலதாமதமும் ஏற்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் விடையிலிருந்து தெரிகிறது. ஆனால் வாக்குறுதி அளிக்கப்பட்டது பட்டதாரி ஆசிரியர்கள் சம்பந்தமாகத்தான். அவர்கள் பிரச்னையைப் பொறுத்தவரையில் தனியாகப் பிரித்துப் பரிசீலனை செய்து அதன் முடிவை வெகு சீக்கிரமாக அறிவிக்க முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

MR. CHAIRMAN : The supplementary must be short.

1972 ஆகஸ்டு 9]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இரண்டாவது ஊதியக் குழு அமைக்கப்பட்டபோதே கூட நாங்கள் யோசித்தோம். கல்வித் துறையைத் தனியாக வைத்து அதிலுள்ளவர்களுக்கு ஊதிய விகிதத்தை நிர்ணயித்தால் பல்வேறு பிரச்னைகள் வராது என்று கூடச் சொன்னேன். ஆனாலும்கூட, சப் இன்ஸ்பெக்டர்கள், செக்ரடேரியட்டில் உள்ளவர்கள் போன்று 5 அல்லது 6 பேர்களைச் சேர்த்து வைத்திருக்கிறார்கள். இப்பொழுது அதிலேயிருந்து பிரித்தெடுப்பதில் சில சங்கடங்கள் இருக்கின்றன. அந்தச் சிக்கல்களைத் தீர்க்கவேண்டிய நிலைமை இருப்பதால், அதுபற்றி ஆராய வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. சிக்கல்களைத் தீர்த்த பிறகு விரைவில் முடிவெடுத்து அறிவிக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சி. வி. ராஜகோபால் : தலைவரவர்களே, பட்டதாரி ஆசிரியர்கள் சம்பந்தமாக ஏற்பட்ட சிக்கலை இரண்டு மாத காலத்தில் தீர்த்து விடுவதாக உறுதி அளித்திருக்கிறார்கள். அப்படித் தீர்த்து விடவும் இருக்கிறார்கள். அப்படித் தீர்க்கும் நேரத்தில், இனிமேல் இப்படிப்பட்ட போராட்டங்கள், மறியல் என்று ஒரு ஐந்து அல்லது எட்டு ஆண்டு காலத்திற்கு சொல்ல மாட்டோம் என்று அவர்களிடம் ஒரு உறுதிமொழியை அமைச்சர் அவர்கள் வாங்குவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

Midday Meals.

* 4. *Q.*—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether the Government are aware that there are numerous poor students in High Schools and Colleges, who are not able to afford midday meals; and

(*b*) if so, whether the Government will consider extending midday meals scheme to them also ?

மதிய உணவு

திரு. ஜீ. சுவாமிநாதன் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) நண்பகலுணவுக்கு வழியில்லாமல், எண்ணற்ற ஏழை மாணவர்கள் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் படித்து வருவது அரசுக்குத் தெரியுமா ?

(இ) ஆமெனில், அவர்களுக்கும் நண்பகலுணவுத் திட்டத்தை நீட்டிப்பது குறித்து அரசு கருதிப் பார்க்குமா ?